[illegible]

ப்ரம்மவித்தியா

சிதம்பரம்—விகாரிஞு கார்த்திகைமீ 3உ

ஆரியாசார ரகஸ்யம்.

தொடர்ச்சி.

சூடாகரணம்.

இவ்விடத்தில் குடுமி வைப்பதானது சுக்கிலத்தைச்சோஷிப்பதற்கென்று கூறினேம். பிறகு முடி தரித்தலின் நியமங்களையும், அதற்குரிய காலத்தையும் மயிர்க்காலினின்றும் தேஜஸ் வெளிப்படுங் காரணத்தையும் நரை முதலியனவுண்டாகும் காரணத்தையும் விளக்குவாம்:—எங்ஙனமெனின், வானப்பிரஸ்தனுக்கு ஊர்த்வரேதஸ் வேண்டுமென்றும், யதிகளுக்கு ரேதஸ் சுஷ்கப்படவேண்டுமென்றும் கூறப்பட்டிருக்கின்றதல்லவா? ஊர்த்வரேதஸ்ஸையுடையவர்கள் சுஷ்கவீரியமுடையவராவார்கள்பற்றி அதை யதிகளுக்கெடுத்துரைத்தது கௌணமாம். வானப்பிரஸ்தருடைய சுக்கிலமானது தபோக்கினியால் எரிக்கப்பட்டுஆவியாகமாறி கபாலத்திற் செல்லுகிறது. ரேதஸ் உயரவெழும்பினுல் பலமற்றவனுகப் போய்விடுவானுகையால், ஆவியாக மாறிக்கபாலத்தையடைந்தரேதஸ்ஸைத்தரிக்கவேண்டி வைகானஸர்கள் எப்பொழுதும்முடிதரித்த லவசியம். அது முன்போலல்ல; (கிரகஸ்தர்கள் தரிப்பதுபோலல்ல.) ஆனுல் ஆலம்பால் முதலியவற்ருல் ஜடையாகச் செய்துகொண்டு முடி தரிப்பதே நியமம். அங்குள்ள இரகசியமிது:—ஆலம்பால் மிகுந்த பசையுள்ளதாகையால், மயிர்க்காலை நன்ருக அடைத்துவிடும். கேசங்களும் வளரும். ஆதல்பற்றிக் கேசங்களை வளரச்செய்யும் தைலங்களுள் ஆலம்பாலே உபயோகிக்கப்படுகின்றது. அன்றி சுக்லசோணிதங்களிலுள்ள கெடுதல்களையும் நிவர்த்திக்கக்கூடிய சக்தியுமிதற்குண்டு. அதனுற்ருன் பும்ஸவன காலத்தில் ஸ்திரீகளின் நாசியில் ஆலம் மொட்டின் இரஸத்தைச் செலுத்துவது வழக்கம். எவ்விடத்தில் சுக்லமுளதோ அங்கு கேசமுமுண்டாமென்று முன்னரே எடுத்துரைத்தோம். இங்கு ஊர்த்வரேதஸையுடையவர்களின் ரேதஸானது எவ்விதம் மயிர்க்கால்களில் வியாபித்துக் கேசங்களை விருத்திசெய்கிறதோ, அங்ஙனமே ஆலம்பாலும் கே

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

சங்களை விருத்திசெய்கிறது. அதனாற்றான் ஊர்த்வ ரேதஸுள்ளவர்களுக்குச் சிரஸில் சைத்தியமும் நீண்டகாலத்தியானமுமுண்டாகிறது. ஆதல்பற்றியே அவர்களுக்குத் தினந்தோறும் சிரஸை நனைப்பது அவ்வளவு அவசியமென்று சாஸ்திரங்களிற்கூறப்படவில்லை. வானப்பிரஸ்தர்களுக்குக் கபாலத்திற்சென்ற ரேதஸானது மீண்டும் கீழே செல்லாமலிருத்தற்பொருட்டு எப்பொழுதும் ஜடையத்தரித்த லத்தியாவசியம். மற்றவர்கள் எக்காலம்வரை ரேதஸ் கட்டுப்படவேண்டுமென்று விரும்புகிறார்களோ அதுவரையில் தீக்ஷை வைத்தல்வேண்டும். அந்த தீக்ஷையும் சிலகாலம் எடுக்க நேரிடுமாதலால், அவர்களுக்கு ஆலம்பால் உபஉபயோகப்படுவதில்லை. ஆனால் கேசங்களை வளர்ப்பதுமாத்திரந்தான் நியமம். விவாககாலத்திலும் பத்தினி கர்ப்பமுள்ளவளாயிருக்குங்காலத்திலும் கிரகஸ்தாசிரமிகள் தீக்ஷை வைத்துக்கொள்வது பிரஸித்தம். பிரமசாரிகள் தீக்ஷை வைத்துக்கொள்ளலாம். கிரஹஸ்தர்கள் தீக்ஷை வைத்துக்கொள்வதின் பயனிது:— கிரஹஸ்தன் விவாகமானவுடன் பத்தினியுடனிருந்து அக்னியையுபாஸித்து அதனாலுண்டாகும் தேஜஸ் சரீரத்தைப் போஷிக்கவேண்டி (பத்னியுடன் கூடவிருந்தாலும்) ஊர்த்வரேதஸுள்ளவனாகயிருக்கவேண்டுமென்று வியவஸ்தை செய்யப்பட்டிருக்கிறது. இங்ஙனமுரைத்த ரேதஸுடன் சிலகாலம் அக்னியையுபாசித்தாற்றான் தேஜஸ் ஸித்தியாகுமென்க. பத்னிக்குக் கர்ப்பநிச்சயமுண்டானதுமுதல் அவளுடன் புணர்ந்து ரேதஸைச் செலுத்தினால் கர்ப்பத்திலிருக்கும் சிசுவுக்குச் சிலசமயம் அதிக அங்கங்கள் சம்பவிக்குமாதலின், அங்ஙனமில்லாமல் ரேதஸ் உறைந்துபோவதற்குத் தீக்ஷை வளர்ப்பது இன்றியமையாதது. இங்ஙனம் எந்தவிஷயத்தில் ரேதஸைக் கட்டுப்படுத்தவேண்டுமென்றேற்படுகிறதோ அந்தக்காலத்திலும், யாகம் முதலியவைகள் செய்யுஞ் சமயங்களிலும் தீக்ஷை வைத்துக்கொள்ளவேண்டுமென்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ப்ரம்மசாரிகளுக்கும் அவ்விதமே.

வரும்

ஸத்வித்யா தூர்த்தசை.

தொடர்ச்சி.

வைதிகன்—ஆகாரங்கிடைக்காமல் மிகவருத்தமடைந்தார்களென்பது இக்காலத்திலன்றி முற்காலத்திலும்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

கொஞ்சங்கூடக் கிடையாது. உதாரணம்—ஒருவன் சென்னையினின்று மதுரைக்குப் போகவேண்டுமென்றெண்ணி முதல்நாள் சாயந்திரம் ரயிலேறினால் மறுநாள் மாலையிற்றான் அந் நகரையடைவான். இவனுக்கு மத்தியில் சாப்பிடுவதற்கும் ஸ்நானஞ் செய்வதற்கும், பல் தேய்ப்பதற்கும், மல விஸர்ஜனஞ்செய்வதற்கும் ஸமயமேது? இம்மாதிரியான அஸௌகரியங்கள் இப்பொழுது உண்டாகின்றதெனச்சொல்லவேண்டியிருக்க, மாறிச்சொல்வது எங்ஙனம்?

லௌகிகன்—அறியாதவன்போல் பேசுகிறீர். ஸ்நானபோஜனாதிகளுக்கு அசௌகரியமானாலும் மலவிஸர்ஜனத்திற்கு யாதொரு அஸௌகரியமுமில்லை. ஆங்காங்கு ஸ்டேஷன்களில் அதற்காகவே தனி இடம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதல்லவா;

வைதி—அறிஞமணீ! ஒரு தினத்தில் தான் சாப்பிடும ஆகாரங்குறைந்தாலும அதிகமானாலும் கால வித்தியாசமேற்பட்டாலும் மகாரோகமுண்டாகுமென உங்களது பரமாசாரியர்களான வெள்ளைக்கூட்டங்கள் சொல்லுகிறார்களே. மற்றும் சூரியோதயத்திற்குமுன் இளகின்று நவத்துவாரங்கள் வழியாகவும், மயிர்க்கால்வழியாகவும் வெளிவரும் மலங்களை அப்பொழுதே சுத்தஞ்செய்யாவிடில் ஆங்காங்கு உறைந்து பற்றிநின்ற அவைகளனேகரோகங்களை விளைக்குமென்றுகற்றுணர்ந்த பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். அன்றியும் தன் மலத்தைத் துலைப்பதற்கு பலக்குழியில் (கக்ஸ்)புகுந்தவுடன் அங்குநிறைந்திருக்கின்ற நாற்றத்தாலுமநேக வியாதிகளுண்டாகும். அவைகளை நிவர்த்திசெய்ய எவ்வித முயற்சிசெய்தாலும் பயன்படாதன்றோ. இதினிரண்டுகோல் விஸ்தீர்ணமேயுள்ளதாகையால இவனைப் போலொருவன் முந்தியே சென்றிருந்தால் பினபோன இவன் என்னசெய்வான்? ஒருசமயம் அவன் போன பிறகு நாசியை யடைத்துக் கண்களை மூடி எப்படியாவது மல விஸர்ஜனஞ்செய்ய ஆரம்பித்தவுடன் ரயிலும் போய்விடும். சாமானியர்களுக்கே இங்ஙனமாயின் மலபந்தரோகம் விஷூசியுடையவர்களைப்பற்றிக் கேழ்க்க வேண்டியதென்ன.

லௌ—அரைமணிநேரம் அல்லது பெரிய ஸ்டேஷன்களில் ஜாஸ்தியாக நிற்குமிடத்தில் சென்று எல்லாவற்றையும் முடித்துக்கொள்ளட்டுமே. சிறிய ஸ்டேஷன்களில் ஏன் கஷ்டப்படவேண்டுமே?

வை—பெரிய ஸ்டேஷன்போவதற்குள் வெளிக்கிறங்கும்படி நேர்ந்தாலெனசெய்வது?

லௌகிக—அதுவரையில் அடக்கிப்பொறுக்கவேண்டியதுதான்.

வை—அதிகமாகத் தண்ணீரைக்குடித்தல், மாதர்களிடமபுணர்தல், பகலிலுறங்குதல், இரவில் கண்விழித்

[illegible]

தல், மலமூத்திரங்களைத் தகைத்தல் ஆகிய இவ்வறுகைகளால் ரோகங்கள் சம்பவிக்குமென்று பள்ளிப்பிள்ளைகளும் படிக்குமே. இவ்வசனத்தைக் கேள்வியுற்றதில்லையா? அன்றியும் பிராமணர்கள் மலமூத்திர விஸர்ஜனஞ்செய்தால் 'ஆண்குறியிலொருதடவையும், குதத்தில்மூன்றுதடவைகளும், இடதுகையில்பத்துத்தடவைகளும், இரண்டு கைகளில் ஏழுதடவைகளும் மண்போட்டுச் சுத்திசெய்யவேண்டு' மென ஸ்மிருதிகர்த்தர்கள் விதித்த சௌசத்தை இக்காலத்தவர்களின் ஆசாரத்தை மேலாக நினைத்து மறந்துவிட்டீர்போலும்! அங்ஙனம் சௌசஞ்செய்யாவிடில் ஜுகுப்ஸை உண்டாகுமன்றோ. அதுபற்றியே பெரியோர்கள் நாசி, வாய், இதுகளினின்று கபத்தையும், குதத்தினின்று மலத்தையும் விஸர்ஜனஞ்செய்தவன் அதை மீண்டுங்கண்டால் தானே ஜுகுப்ஸை அடைகிறானென்று கூறியிருக்கிறார்கள்.

லௌ—உள்ளிருந்து மலம் வெளிப்பட்டால் வெளியில் சுத்திசெய்யவேண்டுமென்கிறீர். உள்ளிருக்கும்பொழுது யாவர் எங்ஙனம் சுத்திசெய்கிறார்?

வை—ஒன்றையுமறியாது ஸர்வக்ஞன்போல் பேசுகிறீர். வைத்திய சாஸ்திரங்களில் தன்வந்தரிமுதலிய மகான்களால் வெகுவாய் விரித்து மல சுத்திக்காகச் சோதனமென்ற ஒரு சிகித்ஸை சொல்லப்பட்டிருக்கிறது. அச்சோதன சிகித்ஸையால் அநுகூலமான ரோகங்கள் மீண்டுமுண்டாவதில்லை. அங்ஙனமே அஷ்டாங்கஹிருதயத்தில்வாக்பட்டாசாரியார்-'சோதனத்தால் சுத்தியானவைகள் மறுபடி உண்டாகா'தெனச்சொல்லியிருக்கிறார். ஆகையால்மலசோதனையைப்பற்றியிருந்த ஜாக்கிரதையுடனிருக்கவேண்டுமென்று கூறினார். களங்கமற்ற இரத்தினங்களிலும் ஒருசமயம் அழுக்குப்படியுமாதலின் எக்காலத்தும மலசோதனையில் ஜாக்கிரதையாகவேயிருக்கவேண்டும். அன்றியும் யோகசாஸ்திரங்களில் கடசோதனையில் வெகுவாய் விரித்துரைக்கப்பட்டிருக்கின்றது. இவைகளை நும்போன்ற சோம்பேரிகள் கவனிக்காமலும் அதன்படியனுஷ்டிக்காமலுமிருந்தாலும் ஆங்காங்கு பெரியோர்கள் யோகரகசியங்களை நன்கு ஆராய்ந்து சோதனைசெய்து திவ்யசரீரம்பெற்றவர்களாய் நீடூழிகாலம் வாழ்ந்து களிப்புற்றார்களென்பது யாவருமறிந்தவிஷயமே. இதன் விரிவு மற்றோரிடங் கூறுவாம். நிற்க; சீட்டு (டிக்கட்) வாங்கும்பொழுது கர்ப்பததிற்புகுந்து வெளிவரும்பொழுது அனுபவித்த கஷ்டததை யனுபவிக்கிறார்கள்.

வரும்.

ஸத்வித்யாபிமானி.

[illegible]

[illegible]

[illegible]

கடிதங்கள்.

கடிதக்காருடைய அபிப்பிராயங்கள் பத்திரிகாசிரியரைச் சாரமாட்டா.

யாஜுஷோபாகர்ம நிர்ணயம்.

(தொடர்பு.)

ஆபஸ்தம்பிகளுக்கு ஆபஸ்தம்பமகரிஷி உபவீதவிதானத்தைப்போல் உபாகரணத்தையும் மறந்துவிட்டார். "சொல்லப்படாத விஷயத்தை மற்றவிடத்திலிருந்து கிரகித்துக்கொள்ளலாம்" என்ற நியாயத்தை மனத்தில் வைத்துக்கொண்டு ஆசிரியர் விட்டுவிட்டாரென்றுதோன்றுகிறது. தருமஸூத்திரத்தில் ஆபஸ்தம்பபகவான் உபாகரணகாலத்தைச் சொல்லியிருக்க, சொல்லாமல் விட்டாரென்பது எப்படியாமெனின்? கூறுவாம்: தர்மசூத்திரத்திற்கூறியது ஆபஸ்தம்பிகளுக்குமாத்திரமென்று ஒருவராலுஞ்சொல்லமுடியாது. ஏனெனில், தருமசூத்திரம் மனு ஸ்மிருதிமுதலியனபோல ஆபஸ்தம்பிகளுக்கும் அன்னியர்களுக்கும் சமானந்தான். இல்லாவிடில், அதில் இராஜதருமமுதலியவை சொல்லப்பட்டிருக்கிறபடியால், அதையனுசரித்த அரசனே அதிற்கூறியவாறு பிரஜைகளை இரக்ஷிக்கவேண்டும்; தண்டிக்கவேண்டியவர்களைத் தண்டிக்கவேண்டும், என்றேற்படும். இதிற்சொல்லியவைகளை வேறொருவர் அனுட்டிக்கக்கூடாதா? எட்டுவயதிற் பிராமணனுக்கு உபநயனஞ்செய்விக்கவேண்டியதென்று கூறியது மற்றவருக்கில்லையா? இதேவிதமாகப் பொதுவான தருமங்களே அதிற் சொல்லப்பட்டிருக்கின்றனவேயொழியக் குறிப்பிட்டு இன்னாருக்குத்தான் இஃதென்று சொல்லப்படவில்லை. ஆகையால், இதனை யாவரும் ஆதரிக்கவேண்டியதுதான். இங்ஙனம் யாவருக்கும் பொதுவான தருமசூத்திரம் ஆபஸ்தம்பிகளுக்குத்தானென்றும், அதிற் சொல்லிய காலத்திலேயே தோஷமிருந்தாலும் இல்லாவிட்டாலும் உபாகரணஞ்செய்யவேண்டுமென்றும், அதிலும் ஒரேகாலந்தான் சொல்லப்பட்டிருக்கிறதென்றும், அதுவும் சிராவணபூர்ணிமைதானென்றும் புத்திசாலிகள் நினைக்கமாட்டார்கள். பௌர்ணமாஸி நித்தியமாகையாலும், ஆபஸ்தம்பருடைய சாஸனத்தாலும், பாத்திரபதாஷாடங்களைவிட்டு, சிராவணியிலேயே செய்யவேண்டுமென்று வைத்தியநாததீக்ஷிதர் மாத்திரம் வியாஸவசனமாய் எடுத்த இந்த சுலோகத்தை இதற்காக ஏற்

[illegible]

பட்டதென்றுஞ்சொல்லமாட்டார்கள் சிராவணி ஸர்வ சாதாரணமென்றெண்ணி, கிருஹ்யகர்த்தாக்கள் யாவரும் இதையும் உபாகரணகாலங்களில் ஒன்றாக எடுத்திருக்கிறார்கள். கௌஷீதகிகளுக்கு—ஒஷதிகளுண்டானபொழுது சிராவணியிலாவது ஹஸ்தத்திலாவது சிரவணத்திலாவது உபாகரணம். சுக்கிலயஜுர்வேதிகளுக்கும் ஆறுபிரிவினரான கிருஷ்ணயஜுர்வேதிகளுக்கும் உபாகரணகாலம் முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது. திராஹ்யாயணர்களுக்கு—ப்ரௌஷ்டபதியிலாவது ஹஸ்தத்திலாவது அத்தியாயோபாகரணஞ்செய்யவேண்டியது. சிலர் சிராவணியிற்செய்யலாமென்றும், ஜைமினியர்களுக்கு—சிராவணியிலாவது ப்ரௌஷ்டபதியிலாவது ஹஸ்தநக்ஷத்திரத்திலாவது உபாகரணஞ்செய்யவேண்டுமென்றும் விதிக்கப்பட்டிருக்கிறது. இங்ஙனம் சிராவணபூர்ணிமை முக்கியகாலமென்று சில கிருஹ்யகாரர்களும் கௌணகாலமென்று சிலரும் சொல்லியிருக்கிறார்கள்.

சிராவணியைத்தவிர வேறுகாலம் எவர்களுக்கு முக்கியமாக விதிக்கப்பட்டிருக்கிறதோ அவர்கள் அந்தக் காலம் ஏதாவது தோஷமுள்ளதாயின், சிராவணி சாதாரணமாகையாலும், அதனைக் கௌணகாலமாக கிருஹ்யகாரர்கள் அங்கீகரித்தபடியாலும், முக்கியகாலத்திற்குத் தோஷம் சேர்ந்தால் தோஷமற்ற கௌணகாலத்திற்றான் கருமத்தையனுஷ்டிக்கவேண்டுமென்று வெகு வசனங்களிருப்பதாலும், ஒரு சமயம் எல்லோரும் சிராவணியில் உபாகரணஞ் செய்வார்களெனக் கருதி, யாவரும் சிராவணியை எடுத்தார்கள். இவ்விதமாகவே ஆபஸ்தம்பமகரிஷியும் சிராவணியையுங்காலமாகக்குறித்தார். தோஷமுள்ளதானாலும் அதிலேயே செய்யவேண்டுமென்று நிர்ப்பந்தித்தார் இலர். வேறு காலத்தையும் சூசனை செய்திருக்கிறார். அதனாற்றான் மனுவும்—சிராவணியிலாவது பிரௌஷ்டபதியிலாவது முறைதவறாது உபாகரணஞ்செய்துகொண்டு, மிகுந்த சிரத்தையுடன் காலரைமாதம் வேதாத்தியயனஞ்செய்ய வேண்டுமென்றார். இங்ஙனமிருக்க; சிலர், தோஷமுள்ளதாயினும் சிராவணியிலேயே செய்யவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அவர்கள் அதற்கு ஆதாரமாகக்கூறிய வசனங்களைச் சிறிது இங்கு விசாரிப்பாம். முதலில், இராகவாசாரியாருடைய வசனத்தை எடுப்போம். இவர் உபாகருமத்தைச் சிராவணியிற்றான் செய்யவேண்டுமென்று சொல்லி, அதற்காதாரமாக, அத்தியாயோபாகருமத்தைச் சிராவணியில் என்று யாஞ்ஞவல்கியவச,

[illegible]

னத்திற் சில பாகத்தைமட்டும் உதாகரித்தார். இவ்வளவு கேள்விப்பட்ட இவருக்கு முழுமையும் கேட்கக்காலமில்லையோ? அல்லது, நமது இஷ்டத்தை நிறைவேற்ற இவ்வளவே போதுமென்று நினைத்தாரோ? அல்லது, வசனத்தை முழுமையுங் கேட்டிருந்தும், நமதபிப்பிராயத்தைச் சாதிப்பது இவ்வளவுதானென்றெண்ணிப் பாக்கியை விட்டுவிட்டாரோ நாமறியோம். அல்லது, யாக்கியவல்கியர் வசனத்தில் இவ்வளவுதான் பிரமாணமென்று நினைத்தார்போலும்! நமது நண்பர் மனுவசனத்தை உதாகரிப்பாராகில், அதிற்சொல்லிய காலாந்தரத்தைத் தள்ளி, பிரமாணமாக அதில் ஒரு பதத்தை மாத்திரம் எடுத்துரைப்பாரென்று நினைக்கிறோம். அந்த யாக்கியவல்கியவசனத்தின் பாஷ்யத்தில் விஞ்ஞானேசுவராசாரியர்—சிராவணமாதத்தில் ஔஷதிகளுண்டாகாவிடில் பாத்திரபதமாச சிரவணநக்ஷத்திரத்திற் செய்யவேண்டுமென்றும் மற்றும் மூலவசனத்தாலும் வேறுகாலம் விதித்திருப்பதைப் பார்க்காமலே சிராவணியிலேயே செய்யவேண்டுமென்று எப்படித்தீர்மானித்தாரோ? நமதன்பருக்கு வேறு தவறல்கூட வந்திருக்கிறது: உபாகரணத்தைத் தத்தம் கிருஹ்யத்திற்சொல்லிய காலத்திற்றான் செய்யவேண்டுமென்று அத்திரி சொன்னதினாலும், தன் தருமமிருக்கும்பொழுதும் அன்னியதருமத்தையனுசரித்தானாகில், தன் இருஷியை நம்பாத தோஷத்திற்காக அந்ததமஸில் விழுவான என்று யாக்கியவல்கியர் தோஷங்கூறியமையாலும், தன் கிருஹ்யத்திற் கூறிய காலத்திற்செய்யவேண்டுமென்று சொல்லிவிட்டுச் சிராவணபூர்ணிமையில் என்று ஆபஸ்தம்பர் யஜுஸ்சாகிகளுக்குச் சிராவணியையே காலமாக விதித்ததினாலும், வேறு காலம் விதிக்காதபடியாலும், சிராவணியிலேயே உபாகரணஞ்செய்யவேண்டுமென்றார். தருமசூத்திரந்தான் கிருஹ்யமென்று எந்தக் குருவினிடமிருந்து அப்பியசித்தனரோ? பாண்டவர்களை யறிவாயா? எனக்கேட்டதற்கு கட்டிற்கால்போல் மூன்று என்று சொல்லி இரண்டு விரல்களைக்காண்பித்து தரையில் ஓர் கோட்டைக்கிழித்தானென்ற கதையைப்போல் நமது நண்பர் கிருஹ்யத்திற்கூறியவாறே செய்யவேண்டுமென்று தீர்மானமாய்க்காட்டித் தருமசூத்திர வசனத்தையுதாகரித்தார். இவருக்கு கிருஹ்யம் தருமம் கற்பம் இவைகளின்விரிவான பேதம் கொஞ்சமேனும் தெரியாது போலும்! அல்லாமலும், யஜுஸ்சாகிகளுக்குச் சிராவணியே காலமென்று சொல்லுகிறார். யஜுஸ்சாகிகளுக்கு ஒரே கிருஹ்யமா? அல்லது அவர்கள் யாவ

[illegible]

ரும் ஆபஸ்தம்பர் தருமசூத்திரத்திற் கூறியபடியே அனுஷ்டிக்கிறவர்களா? அங்ஙனமாயின் அவரவர்கள் கிருஹ்யங்களில் வெவ்வேறாகக்கூறப்பட்டகாலங்களுக்குக் கதி என்ன? அல்லது யஜுஸ்சாகிகளென்பதற்கு ஆபஸ்தம்பிகளென்ற பொருளா? அப்படியானால் மற்றவர்கட்கு எத்தச்சாகை? அல்லது அவர்கட்கு இந்தப் பெயர் தகாதா? ஆபஸ்தம்பிகளுக்கு இதுவே பெயரானால், எந்த வசனத்தாற்கிடைத்தது இது? இங்ஙனம் கிருஹ்யதருமங்களின்பேதத்தையும், யஜுஸ்சாகிகள் எழு பிரிவினருக்கும் வெவ்வேறு கிருஹ்யமுண்டென்பதையும், அறியாமல் இவ்விதம் எப்படித்தீர்மானித்தாரோ? தருமசூத்திரமே கிருஹ்யசூத்திரமென்றாலோ? அது கூடாது. ஏனெனில், அச்சூத்திரத்திற்குப் பாஷ்யஞ்செய்த ஹரதத்தாசாரியார் அப்பூர்ணிமையில் உபாகரணஞ்செய்து தன் கிருஹ்யத்திற்கூறியவாறு செய்து அத்தியயனஞ் செய்யவேண்டுமென்றுரைத்தமையால் இது கிருஹ்யமில்லையென்பதும் இது யாவருக்கும்பொதுவென்பதும் வெளியாயிற்று. ஒரு அக்கினியைக்கொண்டு சாதிக்கக்கூடிய கன்மங்களின் செய்யவேண்டிய வரிசைகள் எதிற்சொல்லப்படுகிறதோ? அது கிருஹ்யமாம். கிருஹ்யங்கள் யாவற்றிலுமிவ்விலக்கணமிருக்கிறது. மூன்று அக்கினிகளைக் கொண்டு சாதிக்கக்கூடிய கன்மங்கள் செய்யும் முறை எதிலோ அது கற்பமாம். அதையேசிரௌதசூத்திரமெனக்கூறுவார்கள். நான்கு வர்ணத்தவர்களுடையதருமங்கள்யாவும் எதிலோ அது தருமசூத்திரமென்பார்கள். இவர் ஸ்மிருதிமுக்தாபலத்தைக் கைக்கொண்டு இங்ஙனம் கூறுவது வாஸ்தவமாயின் அக்கிரந்தகர்த்தாவாகிய வைத்தியநாததீக்ஷிதரவர்களாற்கணக்கிடப்பட்ட பதினெட்டுக் கிருஹ்யங்களையும் கணக்கிடப்படாத காடககிருஹ்ய முதலியவைகளையும் அறிந்தேயிருப்பாரென்பது நிச்சயம். நிற்க. தர்மசூத்திரத்தில் ஆபஸ்தம்பபகவான் ஒரே காலத்தையா விதித்தனர். சிராவணபூர்ணிமையில் உபாகரணஞ்செய்து ஒரு மாதம் பிரதோஷகாலத்தில் அத்தியயனஞ்செய்யக்கூடாது. பௌஷபூர்ணிமையிலாவது அம்மாதத்தில் வரும் ரோகிணிநக்ஷத்திரத்திலாவது நிறுத்தவேண்டும். நான்குமாதமென்று சிலர், நாலரைமாதமென்று சிலர். நான்குமாதமென்கிறபட்சத்தில் பாத்திரபதியிலுபாகரணம் சாஸ்திராந்தரத்தில் கூறினமையால் என்று இரண்டாவது காலம் சொல்லப்பட்டிருக்க சிராவணியிற்றான் செய்யவேண்டுமென்கிற நியமம் எவ்வசனத்தாற் கிடைத்ததோ ? நமது நேசர்களாகிய துரைசுவாமிசாஸ்திரிகளும்

[illegible]

ராகவாசாரியாரும் அபூர்வமாகவும், அற்புதமாகவும் வியாக்கியானஞ்செய்தது அத்தியுஜ்வலமாயிருக்கிறது. இவ்வபூர்வகௌசலம் நிற்க. பின்னும் கிரகணம் சங்கிரமம் முதலியவை சம்பவித்தால் என்று தொடங்கி மேலுமேலும் செய்யவேண்டுமென்ற வசனங்களால் வேறு காலங்களும் சொல்லப்பட்டிருக்க எங்ஙனம் சிராவணி காலந்தானெனக்கூறுவது? என்று ஆக்ஷேபித்துக்கொண்டு இவைகளெல்லாம முதலுபாகரணத்திற்கெனச் சமாதானஞ்சொன்னார். இங்கொரு வேடிக்கையுண்டு. சிராவணிதான் காலமென்பது எப்படி? என்றுசொல்ல உத்தேசித்தநமது நண்பரின் காகிதத்தில் தவளையின் கதியையனுசரித்த (ஏவ) என்னும்பதமானது (சிராவண்யாம்) என்ற பதத்திலிருந்து துள்ளி (கால) என்பதை ஆசிரயித்தது. சிராவணி காலந்தானா? அல்லவா? என்று ஒருவன் சம்சயிப்பானாகில், சிராவணி காலந்தான் எனக்கூறுவது நிச்சயமாகும். சிறிதாயினும் அதுவிஷயத்தில் நாமும் சமுசயப்படவில்லை. நமதுநண்பரும் அவரைச்சார்ந்தவரும்சமுசயப்படவில்லை. புதிதாய் நாட்டியஞ்செய்ய ஆரம்பித்த நடர்களுக்குப்போல் புதிதாய்க்காவியமியற்ற ஆரம்பித்த இவருக்கும்பதம் சுவாதீனப்படாமல் மிக்கதோர் துன்பத்தை விளைக்கிறது. அப்பதத்தை முந்திச்சேர்க்காமற் பிந்தி (காலம்) என்பதுடன் சேர்த்தாற் சரியாய்ப்போகிறது. முந்திப் பிந்தியிருப்பதால் என்ன குற்றமெனச்சங்கிக்கக்கூடாது. சப்தஸ்வரூபமறிந்தவர்களைக் கேட்டால் இதன் பேதம் வெளிப்படும். சாஸ்திரமறிந்தவர்களின்கதை நிற்க. இக்காலபேதங்கள் முதலுபாகரணத்தைப்பற்றியதென்பதற்கு ஒரு வசனத்தையுமாதாரமாகக்காட்டினார். நமது நேசரோ யாவரும் சாமான்னியவிசேஷ நியாயந்தெரியாதவர்களென்றும், தான் சர்வசாஸ்திரநியாயந்தெரிந்தவரென்றுங் கூறுகிறார். அங்ஙனமே எழுதுகிறார். அவரிடத்து இஃதோர் நியாயத்தைக்கூறுவாம். இங்கு ஆக்ஷேபித்த வசனங்கள் சாமானியவசனங்கள். அவைகள் தோஷமுள்ளகாலத்திலுபாகரண சாமானியத்தை நிஷேதிக்கின்றன. அதற்குச் சமாதானமாகக் காட்டிய வசனமோ விசேஷவசனம். அது பிரதமோபாகரணத்தைமட்டும் நிஷேதிக்கிறது. ஒரு நிஷேதத்தைக்கொண்டு மற்றொரு நிஷேதத்திற்குச் சங்கோசஞ்செய்தால் வெகு அதர்மங்கள்நேரிடும். உலகத்தில் விதிபால்நிஷேதத்திற்கும், நிஷேதத்தால் விதிக்கும், விதியாலேயே விதிக்கும் ஸங்கோசமுண்டெனக்கேட்டிருக்கின்றோம். நிஷேதத்தால் நிஷேதத்திற்குச்சங்கோசத்தைக்கேட்ட

[illegible]

தில்லை. அஃதெங்ஙனமெனின்? சகல பிராணிகளையும் ஹிம்சிக்கக்கூடாது என்ற நிஷேதவாக்கியம் யாகத்திற்குரிய பசுவை ஆலபனஞ்செய்பலாம் என்கிறவிடத்திற் பிரவிர்த்திக்கிறதில்லை. இதுதான் அவ்வாக்கியத்திற்கு ஸங்கோசமென்பது. யாகத்திற்குரிய பசுவைத்தவிர மற்றைப்பிராணிகளை ஹிம்சிக்கக்கூடாதென இதன்கருத்து. இரண்டுகாலங்களில் போஜனஞ்செய்யவேண்டுமென்றவிதிக்கு அமாவாசையன்று இரவிற் சாப்பிடக்கூடாதென்ற நிஷேதத்தால் சங்கோசமேற்படுகிறது. பிராமணர்களுக்கு மோரைக்கொடு என்ற விதிவாக்கியத்திற்குக் கௌண்டியருக்குத் தயிர் கொடுக்கவேண்டுமென்ற விதிவாக்கியத்தாலே சங்கோசம். சுரைக்காயைச்சாப்பிடக்கூடாது என்ற நிஷேதத்திற்கு உருண்ட வடிவமுள்ள சுரைக்காயைச்சாப்பிடக்கூடாது என்றதினால் சங்கோசஞ்செய்கிறதில்லை. அதாவது உருண்ட சுரையைத்தவிர மற்றச் சுரையைச் சாப்பிடலாமென்று விதிக்கிறதில்லை. ஆனால் எவ்வகைச்சுரைக்காயையும் சாப்பிடக்கூடாதென்பதும், உருண்ட சுரையைத் தின்பதனால் மிக்க தோஷமுண்டென்பதும் இதன் கருத்தாம். பிராமணவதை செய்யக்கூடாது என்ற நிஷேதத்திற்கு ஆத்ரேயனை (அத்திரிவம்சத்திற்பிறந்தவனை) கொல்லக்கூடாது என்ற நிஷேதத்தால் ஸங்கோசஞ்செய்து அவனைத்தவிர மற்றைப்பிராமணனைக்கொல்வது இதனால் விதிக்கப்படவில்லை. அங்ஙனம் சங்கோசம் செய்யும்பக்ஷத்திற்பிராமணர்களைக்கொன்றால் யாதொரு தோஷமுமில்லையென்பது ஏற்படும். அதனால் அநேக பாபங்கள் மேலிட்டுப் பிரஜைகளுக்குத் துன்பத்தை விளைவிக்கும். பிராமணவதை செய்யக்கூடாதென்பதினாலேயே ஆத்திரேயனையும் வதைசெய்யக்கூடாதென்பது சித்தித்திருக்க மறுபடி தனியாய் அதை விதித்ததினால் அவன் வதையில் மிக்க தோஷமுண்டு; பிராயச்சித்தம் விசேஷமாய்ச் செய்துகொள்ளவேண்டுமென்பது கருத்தாம். பிராணி ஹிம்சை செய்யக்கூடாதென்ற நிஷேதத்தால் மரமுதலியவைகளை வெட்டினாலும் தோஷமுண்டென்றெண்ணி, ஐந்து ஸூனைகளையும் பாபசாதமாக நினைத்து அதனைத் தொலைப்பதற்காகப் பஞ்சமகாயாகங்களை நாடோறுமனுஷ்டித்துவரும்மகான்கள் சாமானிய விசேட நியாயந்தெரிந்தவரன்று போலும்! இங்ஙனம், சாமானியமாக நிஷேதிக்கப்பட்ட இச்சிராவணத்திற்கு விசேஷ நிஷேதத்தைக்கொண்டு சங்கோசஞ்செய்து தோஷமுள்ள சிராவணியிலேயே செய்யவேண்டுமென்று நியமித்தால் மிக்க தோஷமுண்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

டாகும். துஷ்டமானகாலத்தில் உபாகாணஞ்செய்தால் பிரயோஜனமாகாததோடு விபரீதபலங்களுமுண்டாகுமென்பது சாஸ்திரங்களில் வெகுவாய்க் கூறப்பட்டிருக்கிறது. அதைப்பின்னர் உரைப்பாம். தலையிற்சிவலிங்கமகுடம்புனைந்த பத்திரிகையில் வி. துரைசாமி சாஸ்திரிகள் கூறியதைப்பற்றியும் சற்று விசாரிப்போம். இதில் இராகவாசாரியார் எடுத்த வசனங்களே வெகுவாயுள்ளது. ஆதல்பற்றி, அவைகளுக்கு முதற்கூறியதே பதிலாகும். சில வசனங்கள் வேறும் இருப்பதால் அதைமாத்திரமெடுப்போம். பண்டிதரே! தருமசூத்திரமியற்றிய ஆபஸ்தம்பமகரிஷியை நம்சூத்திரஞ்செய்தவரென்று சொல்லுகிறீர். நமக்குமாத்திரமா சூத்திரஞ் செய்திருக்கின்றனர். இங்ஙனமாயின் கௌதமர் போதாயனர் முதலிய மகரிஷிகளின்சூத்திரத்திற்சொல்லியவாறு ஆபஸ்தம்பிகள் ஒன்றுமனுஷ்டிக்கக்கூடாதோ? அல்லது ஆபஸ்தம்பசூத்திரத்திற்கூறியவாறு மற்றவரனுட்டிக்கக்கூடாதா? புத்திவண்மைபடைத்தவரே! ஆபஸ்தம்பமகரிஷியின் திருவடிசார்ந்தவர்கள் வேறொருவரையுமொன்றுக்கும் எதிர்பார்க்கக்கூடாதென்று நினைப்பீராகில் யானும் ஆபஸ்தம்பிதான். இரகஸ்யமாய் ஒன்று உம்மைக்கேட்கிறேன். கோபங்கொள்ளாதுபதிலுரைப்பீராக.

இன்னும் வரும்.

சகோத்திரவிவாகமும், சாமவேதவாத்தியாரும்.

(தொடர்பு.)

நமது கிரகஸ்தரின் நிலைமையைச்சொல்லவும் வேண்டுமோ? அவர்கட்குக் கர்மாவென்பது இன்னதென்று தெரியாது, பிரதிதினமும் உண்பதும் உடுப்பதும் உறங்குவதுவுமே தொழிலன்றி வேறொன்றையுங் கனவிலுமறியார். இவர்கள் உபாத்தியாயர்கள்; அவர்கட்கு இவர்களிடத்தில் விசுவாசமில்லை. இவர்கட்கும் அவர்களிடத்தில் விசுவாசமில்லை. என்ன செய்வது? இருவருங்கூடிச்செய்யும் கர்மாக்கள் எங்ஙனம் பலனைப்பெறும்? பலன் நிஷ்பலந்தான். அங்ஙனமே கலியாணங்களும் நடைபெறுகிறது. அந்தோ! இவர்கட்குக் கோத்திரமென்பது யாதெனத்தெரியவில்லையே. சூத்திரமென்பதை நாடியவருமில்லையே. இவர்களறியாவிட்டால் பிறரையாவது கேட்டறியவேண்டாமா? இவர்கோத்திரத்தை இன்னதென்று தெரிந்துகொள்ளாது முடித்துவிட்டார்

[illegible]

போலும். இது தங்கையைத்தமயனுக்கு மணமுடித்த பாபமன்றோ? இது பெரியதோர் காதகச்செயலன்றோ? இப்படி வீணாக வளர்க்காது, இனி கோத்திர சூத்திரபிரவரங்களை விளக்கிக்காட்டுவோம். நமது பூர்வீகமகரிஷிகள் அத்தியயனஞ் செய்துவந்தகாலத்து வேதமானது அநேக சாகைகளாகப்பிரிந்திருந்தது. அதை முழுவதிலும் கற்றுமுடியாததுபற்றி ஏதேனும் ஒரு வேதத்தை முறைப்படி அத்தியயனஞ்செய்து மற்றவைகளிடத்து அபிமானித்து அதனதன்கருத்தை யொருவாறு உணர்ந்துவந்தார்கள். பிறகு ஒருவிதமாய் இருக்குவேதம் 21 சாகைகளாகவும், யஜுர்வேதம் 101 சாகைகளாகவும், (அதில்சுக்கியஜுஸ் 15, கிருஷ்ணயஜுஸ்86) ஸாமம் 1000 சாகைகளாகவும், அதர்வம் 21 சாகைகளாகவும் பிரிக்கப்பட்டு அவரவர்களால் அத்தியயனஞ் செய்யப்பட்டது. அஃதெப்படியெனில், உதாரணமாக ஒரு மகரிஷிக்கு நான்கு புத்திரர்கள் இருந்தால் ஒவ்வொருவேதத்தை அத்தியயனஞ்செய்து மற்றவைகளிடத்து அபிமானமுடையவர்களாய் இருந்தார்கள். ஆகவே ஒரே வீட்டில் நான்குவேதங்களும் அத்தியயனஞ் செய்யப்பட்டுவந்தது. சூத்திரமென்பது கலிவலிமைபெருத்துக் கண்டதெல்லாம் கொள்கையாய் முடிந்த காலத்து ஒருவிதமாக இல்லாது பலவழியாக அவனவன் வார்த்தையே பிரமாணமாகக் கொண்டதை நோக்கி மகான்களாகிய மகரிஷிகள் நம்மேற்கருணைகூர்ந்து வேதங்கள் ஒவ்வொன்றுக்கும் தேசம் காலம் இடம் இவைகளை நோக்கி அனுட்டிக்கவேண்டிய கர்மாக்களைத் திரட்டிச்சூத்திரமாகக்காட்டினார்கள். அதில் இருக்குவேதத்துக்கு ஆசுவலாயனம் கௌஷீதகம் எனவிரண்டும், சுக்கிலயஜுஸுக்குக் காத்தியாயனமென்றும், கிருஷ்ணயஜுஸுக்குப்போதாயனம் ஆபஸ்தம் ஸத்தியாஷாடம் வைகானசம், பாரத்வாஜம் ஆக்னிவேசியம்என்றும், ஸாமவேதத்திற்கு ஜைமுனி, திராக்கியாயனம் என்றும், அதர்வணவேதத்திற்குக் கௌசிகம் என்றும் இன்னும் பலவிதமாய்ப் பிரிக்கப்பட்டது.

பிறகு கோத்திரமென்பது என்னவெனில், அவரவர் பரம்பரைக்குப் பூர்வீகமகரிஷி எவரோ அவர்வமிசமெனக்குறிப்பதற்காக அவர் பெயர் அமைந்ததே கோத்திரமாம். கோத்திரமென்பதும், சந்ததியென்பதும் ஒக்கும். அங்ஙனமே இப்பொழுது கசியபர், சங்கிருதி, ஹரிதர்முதலிய கோத்திரங்கள் அளவிலடங்காது பலுகிப் பெருகியிருக்கிறது. ஆனால் ஒரே பெயருடைய அநேக கோத்திரங்கள் உண்டாகக்காரணமுண்டு. அதற்குப் பிரவரபேதமேற்படும்; பிரவரமென்பதுயாதெனில் கோத்திரபரம்பரையில் தொடர்ச்சியாகத் தகப்பன் பிள்ளை பேரன்முதலிய பரம்பரையில் (ரிஷியாய்) வேதமந்திரங்கட்குத்திருஷ்டாக்களாய் அமைந்தவர்களே.

இன்னும் வரும்.

உபநிடதங்களும், ரௌரவசித்தாந்திகளும்.

(தொடர்பு.)

மேற்கண்ட மூவாசாரியர் நல்லுபதேசவழி ஆரியதேசத்தில் இல்லாமையால் அவர்கட்கு அதன் உண்மை விளங்கவில்லைப் போலும்! அவற்றிற்குரிய பொருளை விளக்க வேதப்பயிற்சி, வேதாங்கப்பயிற்சி, தர்க்கப்பயிற்சி, மீமாஞ்சைப்பயிற்சி, இலக்கியப்பயிற்சி இவைகளெல்லாம் ஈழத்திற்றானே மலிந்தமையாலோ இந்நாட்டவருக்கு உண்மையையறியச் சக்தி இல்லை. ஐயோ! ஈழப்பிசாசம், தமிழ்ப்பிசாசம், ஆகமப்பிசாசம், அவைதிக்ப்பிசாசம், அகந்தைப்பிசாசம் இவைமுதலிய பலபிசாசங்கள் ஆரியத்துவேஷப்பிசாசத்தின் தலைமையின்கீழ் ஐயரை ஆட்கொண்டனபோலும்! இவர் ஆரியதேசத்திற்கு வருவதற்குமுன் சிறிதேனும் வடவெழுத்து வாடையை அறிந்திருப்பரோ அது சமுசயமே! இத்திறனில்லாது பத்திராதிபரை விளித்து “அவருக்குச்சாமர்த்தியமுளதேல், பல பிரபலப்பிரமாணங்கள் வாயிலாகச் சிவாத்துவிதமும் மாயாவாதமும் அபேதமாமாற்றை நிருபணஞ்செய்வாராக” என்றார், இது வெகு விந்தை! இவ்வாக்கியம் உண்மையில் இவரிடத்தே பிரயோகிக்கப்படத்தக்கது; இவர் வாதமே மாயாவாதமெனப் பன்னூல்களால் பலதொடுத்து நிரூபித்திருக்கின்றமையாலும், யாமும் சூரியபுராணப் பிரமாணத்தைக்கொண்டு அங்ஙனமே நாட்டினமையாலும், சிவாத்வைதமென்ற மதத்திற்கும் இவருக்கும் சம்பந்தம் சிறிதும் இன்மையாலும், ஸ்ரீகண்டமதத்தில் இவருக்கு நூறுவிரோதங்களை எடுத்துக்காட்டினமையாலும், அவ்விரண்டையும் ஒன்றுபடுத்தவேண்டிய சுமை ஐயர் தலைமேலேற்றப்பட்டு என்றும் இறங்காது நிற்க, சிவாத்வைதநிர்ணயம் வகுத்தருளிய ஸ்ரீமத்திட்சிதமூர்த்திகளே இவ்விருபாஷ்யங்களும் ஒருபொருள்கொண்டு முடிந்தனவென நிரூபித்திருக்க, அவர்களெடுத்துக்காட்டியருளிய பிரப்லப்பிரமாணங்களில் ஒன்றுக்கேனும் சமாதானஞ்சொல்ல ஆற்றலற்ற இவர் எந்நாளுக்குத்தான் சமாதானம் சொல்லப்போகிறார். உத்தரகுமாரன் வீரவாதம் பாரதத்தின் ஓர்புறத்தைக்கவர்ந்ததுபோல் இவர் போன்ற சிலர் வீரவாதங்கள் இவ்விவேகதிவாகரன் பத்திரிகையைக்கவர்ந்துவருகின்றன. கர்ணன் சல்லியனைச் சாரதியாய் ஏற்றுப் போர்முகஞ்சென்றதுபோல, தீட்சிதராதியோர் நூலையேற்று இவர் விவாதகளத்தில் தோன்றியதாம். நிற்க, சிவாத்வைதவித்தியாபரமாசாரியராய் பாஷண்டஷண்டகண்டனபண்டிதராய் விதண்டாசண்டபிண்டதூலவாதூலராய் அன்றெழுந்தருளிச் சிவாத்வைதநிர்ணயம் வகுத்தருளிய ஆசிரியர் அப்பயதீக்ஷிதயோகிமூர்த்திகள் அருட்சம்பந்தம், பொருட்சம்பந்தம், அங்கசம்பந்தம், இம்முச்சம்பந்தங்களும் மூற்றும் குறையாது அன்று ஒன்பான் தலையில் தம்மிடம் விளங்கப்பெற்ற பண்டிதர்பிரான் பாவனமூர்த்திகள் மகிகுலநாதன் மஹாமஹோபாத்தியாயன் மன்னவர் போற்றும் மன்னார்குடிமணி மாசிலாத்தேசிகன் மலரடிபோற்றி, சிவாத்வைதச்செல்வம் தழைப்ப நல்லுபதேசம் யமுடன் பெற்று நூற்றுடன் நான்கும் நூல்களாய் தீட்சிதர்கோமான் வகுத்த நன்னூலனைத்தும் நாவிடநடனம் நாடோறுஞ்செய நூல்கள் பலபல ஆரணங்கமழ இயற்றிய சாம்பசூடாமணியாம் எமதாசிரியன் முன்னிலைப்பட்டு வாதப்போர் புரிய வலி இவர்க்கு உண்டோ?

ஐயன்மீர்! கேண்மின்! பிரமோபநிடதமுதல் முக்திகோபநிடதம் ஈறாக உள்ள தொண்ணூற்றெட்டு உபநிடதங்கட்கும் இயற்றிய பாஷ்யங்கள் தொண்ணூற்றெட்டு, அஃதன்றி, பாசுபத பிரம்மவித்தியா வார்த்திகம், அதர்வசிரோபாஸ்கரம், கைவல்லியதீபிகை, அதர்வசிகாஸுதாகரம், காலாக்னிருத்திரசப்தஜிஹ்வா, கலிகண்டகோத்தாரம், குருசரணபூஷணம், காயத்திரிவித்தியா, காயத்திரிரக்ஷா, மந்திரராஜமார்த்தாண்டம், அதன் வியாக்கியானம், பிரணவார்த்தசிந்தாமணி, பிரணவப்பிரகாசம், பஞ்சாக்ஷரமஹிமா, மஹார்ணவம், தரங்கமாலை, புராணரக்ஷா, வஜ்ஜிராங்கரக்ஷா, புராணபுண்ணியஸ்தவபவம், சர்வசந்தியாபாஷ்யம், பூதிசாஸனம், சிவசிந்தனசந்தானம், மஞ்சரி, பிரபதனபாரிஜாதம், விவரணம், சிரௌதசிவாபிதானரத்தினமாலா, டிப்பணி, சிவாத்வைதப்பிரகாசம், சிவதத்துவசுதாநிதியின்சிந்தாமணி, ஸ்ரீருத்திரமஹிமா, நிகமாகமபிராமாண்ணியம், குருசிஷ்யபதிக்கிரமம், சிவஸர்வஸ்வமுதலிய அநேக சாம்பவநூல்கள் இயற்றிச், சிஷ்ய பரம்பரைகளில் உபதேசித்தும் வெளியிட்டும் வரும் பத்திராதிபர் அவர்கள் ஏதோ பிரமாணங்கள் எடுத்து நிரூபிக்கவில்லையென்றும், இவர் நிரூபித்ததாகவும் நினைத்தெழுதியது வடமொழி வாடையுள்ள சிறு குழந்தையும் பரிகசிக்கத்தக்க விஷயமேயாம். மேலே அப்பயதீட்சிதசுவாமிகள் பல நிர்க்குணநூல்களை இயற்றியிருந்தாலும், அவை சித்தாந்தமல்லவென்றும், சிவதத்துவவிவேகமுதலிய சகுணநூல்களே அவர் சித்தாந்தமாமென்றும், அதை வேதாந்திகள் அறியாது தாமறிந்தாரென்றும் இவர் ஒருவாறு தம்முள் தாம் மகிழ்ந்து சில வரிகளை நடாத்துகின்றார். சிவதத்துவவிவேகமுதலிய நூல்களின்மூலத்தை ஒருவரும், வியாக்கியானம் மற்றொருவரும் செய்திருந்தால் இவர்போன்ற சிலர் செய்யும் சில அசப்பியசங்கைகளுக்கு அதனிடத்தே இடமுண்டாகக்கூடும். அங்ஙனமில்லாது, மூற்றும் அத்தீட்சிதமணிகளே அருளிச்செய்தாராதலின், அவ்விடத்திவர்சொல்லும் விபரீத அபிப்பிராயங்கள் யாதும் அமைந்தில. மத்வமதவித்வம்ஸனத்தில், மூற்றும் துவைதவாதத்தை, அத்தீட்சிதமணிகள் வேரறுத்திருப்பதை இவர் கேட்டிரார். நியாயரத்தினமாலை, நயமயூகமாலிகை, நயமணிமாலை, நியாயரக்ஷாமணி இந்நான்கு நூல்களையும், மாத்வ வைணவ சைவ அத்வைதங்களுக்காக இயற்றி ஒன்றன்பின் ஒன்றாய் அமைத்து ஒன்றின்மேலொன்றைச்சித்தாந்தப்படுத்தியதும், சிவதத்துவ விவேகத்தின் இறுதியில் வைணவரைக்கண்டிக்க இச்சைவத்தைக்கொண்டோமன்றித் தாமுண்மையில் அத்வைதியே என அத்தீட்சிதமூர்த்திகள்

அருளிச்செய்ததும், இவருக்குத்தெரிந்திருக்குமேல், இறகுபோனவழியெலாம் இங்ஙனம் கழறிவிடார். மேலும், இறுதியில் தாம் ஏதோ ஒரு சித்தாந்தத்தை முடித்ததாக நினைத்து வீட்டுக்குள் உட்கார்ந்து, அம்மையார் தம்மிஷ்டப்படி உப்புமுதல் கற்பூரபரியந்தமெனப் பொருள்களுக்கு எல்லை கட்டுவதுபோல் ஈசம் முதல் அதர்வசிகை ஈறாகவென உபநிடதங்களுக்கு இவர் ஓர் எல்லைவகுத்தார். அதர்வசிகை ஈறாக என்றால் முக்திகோபநிடதத்தில் படித்த முறை பற்றியா? அல்லது ஞானசாரோபநிடதமுறைபற்றியா? இவ்விருமுறைகளையும்விட்டு மூன்றும் முறை பற்றியா? முதன்முறையில் ஈசம், கேனம், கடம், பிரச்னம், முண்டகம், மாண்டூக்கியம், தைத்திரி, சாந்தோக்கியம், ஐதரேயம், பிரகதாரண்ணியகம், பிரமம், கைவல்லியம், அவிமுக்தஜாபாலம், சுவேதாசுவதரம், ஹம்ஸம், ஆருணி, கர்ப்பம், நாராயணம், பரமஹம்ஸம், அமிர்தபிந்து, அமிர்தநாதம், அதர்வசிரசு, அதர்வசிகை என்று முறை அமைந்திருக்கின்றது. ஞானசாரத்தில் இம்முறையில் இருபத்துமூன்றாவதான அதர்வசிகை முப்பத்துமூன்றாவதாகப்படிக்கப்பட்டது. சிறுபான்மையில், அம்முறையும் சிலர் கொள்ளுவாராயின், இவர் குறித்த பலவேதாந்த உபநிடதங்கள் இதனுட்படுகின்றன. அமிர்தபிந்து, அமிர்தநாதம், ஹம்ஸம், பரமஹம்ஸம், ஆருணி இவையெல்லாம் இவருக்கு ஆகா உபநிடதங்கள் ஆதலால், உலகத்தில் பெரும்பான்மையிலும் சிறுபான்மையிலும் வழங்கிவரும் முக்திகம் ஞானசாரமென்ற இருவகைப்பாடங்களும் இவருக்கு விபரீதங்களே ஆக, இவர் மனத்தில் நினைத்துக்கொண்டிருக்கும் பாடமுறை உப்பை முதலாக்கிக் கற்பூரத்தைக்கடையாக்கிய கைம்பெண்களின் முறைபோல் அறிஞர் அவையேற் அனர்கமாதலின், சென்னை ஆரியனூர் முதலிய வேதாந்திகள் இவர் பன்முறை பன்னி உரைத்தாலும் இக்கோணவழியைக் கைக்கொள்ளார். அப்படிக்கில்லாது ஆக்ஷேபத்திற்கிடனாய் வாதிக்கப்படும் ஆதசங்கிதாப்பிரமாணங்களும், மற்றைத்தாழ்ந்தபடிக்கண்ணவாம் மாயாவாதோபநிடதப்பிரமாணங்களாகச் சென்னை ஆரியனூரால் தமது தச்சமொழிப்பத்திரிகைகளிலே உதகரிக்கப்படுமாயின் அப்பிரமாணங்களும், அவர் அப்பிரமாணபத்திரிகை புத்தகங்களும் சைவர்களாலே எட்டுணையும் பொருட்படுத்தப்படமாட்டாவென்பதை அவ்வாரியனாரும் அவர் குழாங்களும் அறிந்துகொள்வார்களாக'' என்று மேலே முடிவுரைகூறுகின்றார். இதற்கு யாமும் கூறவேண்டிய முடிவுரை வேறொன்றுண்டு.

ஐயரே! நீவிரும் நமது குழாங்களும் வேத வைதிக விப்ரத்வேஷங்கள் நிறையப்பெற்று அசுரர் அரக்கர் நாட்டிற் பிறந்த விபரீத வினைப்பயனால் உமக்குத் தோன்றியவைகளையே பிரமாணமாமெனவும், மற்றைய அப்பிரமாணமெனவும் அவைகளையெடுத்து வழங்கக்கூடாதெனவும், யாமொப்பிய புத்தகங்களையே எடுத்து வழங்கிவரவேண்டுமெனவும் ஆணையிடுவது மனோராஜ்யமே, ஐயரே! நீர் ஏன் வீணில் ஆரியத்திற்கும் உபநிடதங்கட்கும் ஒருமை பாராட்டுகிறீர்? வாரும்! உமதுநாட்டு முன்னோர்களான அசுரர், இயக்கர், அரக்கர்முதலியவருக்கு உபநிடதங்கள் உரியனவா? அல்லது எம்மனோராய் எமது நாட்டில் வசித்த வசிஷ்டர் முதலிய பல்லாயிரம் ரிஷிகளுக்கு அவையுரியனவா? நீவிர் உத்தமப் பாஷையெனக்கொண்டாடும் தமிழ்ப் பாஷைக்குரியவரான குறவர் முதல் பரதவர் ஈறாக உள்ள ஐந்திணைத்து ஆதிபுருடர்க்கு அவையுரியனவோ? அல்லது பஞ்சகவுடர்பஞ்சத்திராவிடரெனாஸ்ரத்துவகைப்பட்ட எம்மனோர்க்குரியனவா? அநுதிரிஷி பாரம்பரையில் உபாயன சம்ஸ்காரம்பெற்ற ஆரியருக்குரியனவ? அவை வரிக்கெனப்பூணூல் தரித்த உமது நாட்டவர்க்குரியனவா? அவை மேரு மந்தரம் இமயமலை விந்தியம் அருணாசலம் பொதிகை முதலிய புண்ணிய பர்வதங்களில் வசித்தவருக்கு அவ்வுபநிடதங்கள் குலதனமா? திரிகூடம் சேதீச்சுரம் முதலிய மலைகளில் வசித்தவற்கா? காசி, காஞ்சி, அவந்தி, சிதம்பரம், திருவாலவாய், திருவிராமேச்சுரம் முதலிய புண்ணிய ஸ்தலவாசிகளுக்கு அவை உரியனவா? கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், இலங்கை முதலிய உத்தம ஸ்தலவாசிகளுக்குரியனவா? கோத்திரம், சூத்திரம், சாகை பிரவரம் இவைகளை விடாதுகாத்த எம்மனோருக்குரியனவா? அவற்றை முறையுடன் காப்பாற்றாத நம்மனோருக்குரியனவா? கங்கை, யமுனை, நர்மதை, கோதாவரி, கிருஷ்ணை, காவேரி, தாம்பிரபர்ணிமுதலிய புண்ணியநதிதீரவாசிகளுக்கு அவையுரியவா? நமது நாட்டுக் காட்டாற்றுக்கரையாருக்கு அவையுரியனவா? போதாயனர் ஆபஸ்தம்பர் முதலிய சூத்திரக்காரர்கள் கங்கை முதல் தாம்பிரபர்ணி ஈறாக உள்ள எழு கங்கைகளின் சம்மந்தமில்லாதவிடத்தில் குடியிருக்கும் அந்தணர் சம்ஸ்கார ஹீனரென்றனரே அவருக்கு அவை உரியனவா? அல்லது அவர் குறித்தவிடத்திற் குடியிருப்போருக்கா? புலவரே! நமது முன்னோரும் ஏகான்மவாதியென வழங்கிய வேதவியாச முனிவர் கோமான் வகுத்தருளிய வேதங்கள் அவ்வினத்தாருக்குரியனவா? கிரீச்சுரசாங்கியத்தையனுசரித்து நானாத்மவாதஞ்செய்யும் நம்மவருக்குரியனவா? வேதங்களே பிரமாணங்களுள் சிறந்தனவாமெனவாதிக்கும் வைதிகர்களுக்கவை யுரியனவா? வேதம் பொதுநூல், சாமான்னியநூல், மோகநூல், மயக்கநூலென்பதாதி சொற்களால் வேதவைதிகநிந்தனைசெய்துழல் ஈதமில்லமணரென்று அன்று ஆளுடையபிள்ளையாரெடுத்துக் குறித்த அவைதிகருக்குரியனவா? மற்று ஆதியோடந்தம் அத்வாயு ஹோதா உத்காதா பிரமாவென்ற நான்குரித்துவிக்குகளுக்குரிய நான்குவேதங்களும், "பாப்பைப்படுத்தெங்கும் பசுவேட்டெரியோம்பு'மென்று காழிப்பிரான் கவுணியர்மணி அருளிச்செய்தவாறு யாகநிஷ்டாகளுக்குரியனவா? அவ்யாகதூஷகர்களான மறை வழக்கமில்லாப் பாவிகளெனவும் வேட்டுவேள்விசெய்யும் பொருளை விளிமூட்டுசிந்தை முரட்டமண்குண்டர்என்றும் அழலதோம்பும் அருமறையோர் திறம் விழலதென்னுமருகர் அந்தணாளர்புரியும் அருமறை சிந்தை செய்யாவருகர் வைதிகத்தின்வழியொழுகாதவரென்று பல்வகை அன்றுபாலறுவாயர் பகர்ந்தவிபரீத விலக்கணமுடையார்க்குரியனவா? எல்லாம் ஆன்மமயமென்று நிரூபிக்கும் வேதாந்தங்கள் ஆத்மசத்தியவாதிக்குரியனவாமா ஆத்மசூன்னியவாதிக் குரியனவாமா? வரும்.

வேதாந்தபுரியின் வர்த்தமானம்

"அஞ்ஞானக்காடு" அநேக மாந்தர்கள் அஞ்ஞானக்காட்டில் நுழைந்து காமக்குரோதாதிகளெனும் முட்களால் குத்தப்பட்டு மனமெனும்புலியால் வதைக்கப்பட்டு ஆசையெனுந்தியால் வெதுப்பப்பட்டு சமுசாரமெனும் ஆற்றைத்தாண்ட முடியாது விழிக்கிறார்களெனச் சர்வலோகசாதாரண கருணையங்கடல் கேட்டு அவர்களை நல்வழி நடத்த இங்கு வரப்போகிறதான ஞானக்குருவிகளாற்கூவப்படுகிறதாம்.

*
* *

"தன்னைமறந்தவர்கள்" அநேகர் பிரமத்தைத்தேடுவதற்கு அநேக இடங்களிற்சென்று பலரையுங்கேட்டு, பிரமத்தைக் காணமுடியாமல் பேதமை பிடித்து அலைகிறார்களென ஸ்ரீசங்கரர் கேட்டு அடியில்வருமாறு கூறினாராம். ஸ்வஸ்யபித்வஷிநு ச்சௌகஸ்யாஸ்ஸிஸம்ஶய: ஸாம்ஸ: ஸத்ராவி ஸம்ஶயஶ்ரேஷ ஸம்ஶயிதா யஸ்ய ஸவ ஸவஸி ஸம் என்றபடி தான் இருப்பதிற்சந்தேகமுண்டானால், சமுசயித்தவன் யார்? அவனே ஆத்மா, அந்த ஆத்மாவே பிரமம் என்ற அனுபவம் வந்தாலன்றோ தன்னைத்தெரிந்தவனாவான் என்றாராம்.

*
* *

"ஏற்றுமதி" வேதாந்தபுரியினின்று ஞானக்குருவிகளிற் சிலவற்றை மேற்றிசையரர் கப்பலில் ஏற்றிக் கடலைக்கடத்தி தங்கள் வீடுகளில் வைத்துக் கொஞ்சிக்குலாவிக் கூத்தாடுகிறார்களென வதந்தியுலாவக்கேட்டு அப்புரியின் மாந்தர்கள் தங்கள் ஞானக்குருவிகளுக்கு உபசாரஞ்செய்கிறார்களாம்.

*
* *

"இறக்குமதி" அநேக நாடுகளிலிருந்து இப்புரிக்கு ஆத்மஞானமற்ற அநேகர் கண்டதையெல்லாம் கூறி, மனுஷத்துக்களின்புத்திரர்களைக்கெடுக்கிறார்களென ஞானசூரிகள் அநேகர் தங்கள் நாதனைக்குறித்துத் தவஞ்செய்ய ஒழிந்த இடந்தேடி ஏகாந்தமாயிருக்க நினைக்கிறார்களென வதந்தி உலாவுகிறது.

*
* *

"திருட்டு" இப்புரியில் அநேக திருடர்கள் கபடவேஷம் போட்டுப் பலரை ஏய்த்துத் தங்கள் வழிப்படுத்தித், தானும் கெட்டு பிறரையும் கெடுத்துக் கடவுளால் கண்டிக்கப்பட்டுக் கடையுலகஞ்சென்று காலனால் சிதைவுபட்டுக்கெட்டலைகிறார்களென அகஸ்தியரொன்பாருக்கு அந்தரதந்திவந்ததாம்.

*
* *

"வியாபாரம்" அநேகர் தர்மசாஸ்திரவசனங்களையும், உபநிஷத்வசனங்களையும் தன் ஜீவனத்துக்காக வியாபாரஞ்செய்து கண்டபடி பொருள் செய்துகொடுத்து மனம்போனபடியெல்லாம் நடந்து கெட்டலைகிறார்களென மஹான்களான தபஸ்விகளும், ஞானிகளும், மதாபிமானிகளும் விசனிக்கிறார்களெனக் குண்டுணிமஹரிஷியாற்கேள்விப்படுகிறோம்.

*
* *

"சுவாமிகள்" நான்குவர்ணத்திலும் காவிகட்டும் சுவாமிகள் கிளம்பி உண்மையான சுவாமிகளை உள்ளேயிருத்தி இவ்வம்பல சுவாமிகள் வெளிவந்துதென்னம்பால் பனம்பால் மனப்பால் முதலிய பால்களையும் மற்று அநேக நல்ல வஸ்துக்களையும் பானம்பண்ணி உண்மையான சுவாமிகளின் கவுரவத்தையும் கெடுத்துவிடுகிறார்களென்று அநாமதேயன் என்ற பத்திரிகை கூறுகிறதாம்.

*
* *

"இருஷிகள்,, இக்காலத்திய மோசே மகரிஷி ஜோஸப்மகரிஷி தாமஸ்சாஸ்திரிமுதலிய அநேகர் தோன்றி நம் பழைய ரிஷிகளின் மகிமைகளைக் குறைக்கப்பார்க்கிறார்களாம். இது செந்தாமரைக்கண்ணனை அந்தகன் தன் இனத்தானென்று கூறியதுபோலவென்று ஞானசிலர் என்பவர் பறைபறைவிக்கிறாராம்.

*
* *

"குருக்கள்,, வெகுகாலமாகத் தத்துவஞானோபதேசஞ்செய்ய மேற்றிசைக்குருக்கள் பலர் பலவிடங்களில் உபதேசஞ்செய்கிறார்களென்பது ஒவ்வொருவரும் அறிந்தவிஷயம். அறிந்திருந்தாலும் ஒவ்வொருவரும் அதைக்கண்டிக்க முன்வராதிருப்பதைக்கண்டு கானகத்துப் பக்ஷிகளிற்சில வெளிவந்து உபந்நியசிக்க வரலாமாவென்று சில்லரைக்கேட்டதாம்.

*
* *

"அமிருதம்,, வேதம் எனும் அமிருதத்தைப் பானம்பண்ணின அநேகர் வேதாந்தவெளியில்நித்தியானந்தாநுபவபரோக்ஷ சாக்ஷாத்காரத்தைப்பெற்று எந்நாளும் பார்த்திராத பேரின்ப வாழ்வைப் பெறுவார்களெனத் தத்துவஞானியொருவர் கூறுகிறார்.

[illegible]

[illegible]